## சுடர் இதழில்

**புதிய தொடர் நவீனம்**

- பிரபல நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தன் எழுதும் **''ஒரு சாத்தான் வேதம் ஓதுகிறது''** தொடர் நாவல் ஆடி இதழில் ஆரம்பமாகிறது
- காசி ஆனந்தனின் ''தேனடு'' **''காதலும் காமமும்''** —தித்திக்கும் கவிதைகள்
- தமிழச்சியாக பிறக்கவிரும்பும் கனேடிய நங்கை றிஸ்ஸா
- கலைஞர் கருணாநிதி பதில்கள்
- நாவலர் நெடுஞ்செழியன் கட்டுரை

இன்னும் பல அம்சங்களுடன் ''சுடர்'' ஆடி இதழ்

**இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது!**

விலை ரூபா ஒன்று மட்டுமே



# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆடி 17 | ஷஃபான் 4 | (1-8-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 29


● சிறையிருக்கும் இளைஞர்கள் சம்பந்தமாக

## உயர் நீதிமன்றத்துக்கு ஆட்கொணர்வு மனு!

நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் அவசரகால விதிகளின் கீழ் விளக்கமறியலிலும் தடுப்புக் காவலிலும் தற்போது வைக்கப்பட்டிருக்கும் 29 தமிழ் இளைஞர்கள் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் விரைவில் ஆட்கொணர்வு மனு (ஹேபியஸ் கோபஸ்) தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த இளைஞர்கள் தங்களை விடுதலைசெய்யவேண்டும் அல்லது விசாரணைக் குட்படுத்தவேண்டும் என்று கோரி ஆகஸ்ட் 5ம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போவதாக பிரதமருக்கு அறிவித்துள்ளார்கள்.

இந்த இளைஞர்கள் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யும் முயற்சியில் முன்னாள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு. புள்ளைநாயகம், சட்டத்தரணிகள் திரு. [illegible]ஸ். சி. சந்திரகாசன், செ. வே. விவேகானந்தன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

# 'தனிநாடு கோரிக்கை சர்வதேச சட்டப்படி செல்லுபடியானது!'

''சர்வதேச சட்டப்படியும், ஐ. நா. சாசனப்படியும், கூட்டுச்சேரா நாடுகளின் 1964ம் ஆண்டுப் பிரகடனப்படியும், ஈழத்தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோருவதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள். சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமைக்காக திரு அமிர்தலிங்கமும் ஏனையோரும் நடத்திய போராட்டத்தை குற்றமாகக் கணிப்பது அடிப்படை மனித உரிமையைப் பறிக்கும் சட்டவிரோதமான நடவடிக்கையாகும்''

இவ்வாறு தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான வழக்கில் திரு. அமிர்தலிங்கம் சார்பாக வாதாடிய திரு. மு. திருச்செல்வம் தெரிவித்தார்.

''தங்கள் சொந்த ஆதாயம் கருதி அதிகாரத்திலுள்ள கட்சியினர் கொண்டுவந்த புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழ் மக்களின் சம்மதம் பெறப்படாமையினால் அது ஒரு வெறும் கடதாசியே. தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறாத அரசியல் திட்டத்தை ஒரு நீதிமன்றம் செல்லுபடியானது என்று கூறமுடியாது. தமிழ் மக்களின் சம்மதம் இருந்தால் மட்டுமே புதிய அரசியல் சட்டத்துக்குச்சட்ட வலு இருக்க முடியும்.''

## 'தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய அரசியல் திட்டம் வெறும் கடதாசியே!'

—இவ்வாறு வாதாடிய திருச்செல்வம், ''இலங்கை அரசாங்கத்தின் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உண்மையில் இருக்கிறதா? தொடர்ந்தும் அப்படி இருக்க முடியுமா? இந்த அரசியல் சட்டம் தொடர்ந்து நிலைக்குமா?'' என்ற ஐயங்களையும் எழுப்பினர்.

''நாடு முழுவதையும் அரசு தனது கட்டுபாட்டுக்குள் வைத்திருப்பதால், புதிய அரசியல் சட்டம் ஓர் அரசியல் யதார்த்தமாகிவிட்டது என்று சட்டமா அதிபர் இங்கு கூறினர். இந்த வாதத்தை நீதிபதிகளாகிய நீங்கள் ஏற்பதானல் அதை சர்வதேச சட்டத்தின் அ[illegible]படையில்தான் ஏற்க முடியும். ஆனல், சர்வதேச சட்டத்தின்படி அதை ஏற்கும் பட்சத்தில் அதே சர்வதேச சட்டத்தின்கீழ் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளும் அதற்கான போராட்டங்களும் சட்டபூர்வமானவை என்பதையும் நீதிபதிகளாகிய நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழ் இனத்தின் சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமைக்காகவே திரு. அமிர்தலிங்கம் இந்தப் போராட்டத்திலீடுபட்டார்.

''உள்ளூர் சட்டப்படி, அரசியலமைப்புத்திட்டம் சட்டபூர்வமானது என்ற வாதத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால், 1972ம் ஆண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் கொண்டிருந்த தொடர்பினைத் துண்டித்துக் கொண்டதன் மூலம் தமிழ் மக்கள் 1619ம் ஆண்டு போரில் இழந்த அரசுரிமையையும், சுதந்திரத்தையும் இறைமையையும் மீளப் பெற்றுக்கொண்டு விட்டார்கள் என்ற வாதமும் சட்டபூர்வமானதே என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு மேலும் குறிப்பிட்ட திரு. திருச்செல்வம், ''கூட்டுச்சேரா நாடுகளின் இரண்டாவது மாநாடு 1964 ஆம் ஆண்டு கெய்ரோவில் நடைபெற்றபோது. தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானித்துக்கொள்ள ஒவ்வொரு மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு என்ற தீர்மானம் அங்கு எடுக்கப்பட்டது. அந்தத்தீர்மானத்தை இலங்கையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. தங்களுக்கென ஒரு நாடும் அரசும் இல்லாத பாலஸ்தீனியர்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கை இலங்கையுட்பட சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறும்போது — தங்களுக்கென ஒருநாடு இருந்தும் அரசுரிமையற்றிருக்கும் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை எந்தவிதத்தில் தவருனதாகும்?

என்று கேட்டார்.

## நீதிமன்றத்தில் திருச்செல்வம் உரை!

● முழுப்பேச்சும் உள்ளே காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# “அரசியல் சட்டத்தை 1972-ம் ஆண்டே தீயிட்டுக் கொழுத்தியவர்கள் நாங்கள்!”

## தேசிய அரசுப் பேரவையில் ஜெயக்கொடி!

**போர்த்துக்கேயர்கள் இந்நாட்டில் காலடி எடுத்து வைத்தபோது இந்தநாட்டிலிருந்த தமிழ் அரசை அவர்கள் போரின் மூலமே கைப்பற்றினார்கள். சோல்பரி அரசியலமைப்புத் திட்டம் 1972ம் ஆண்டு மே 22 ம் திகதியுடன் நிராகரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் மகாராணியுடன் இருந்த உறவு துண்டிக்கப் பட்டவுடன், தமிழ் மக்களின் இறைமை தமிழ் மக்களிடமே சேரவேண்டும். அந்த உரிமைகாகப் போராடி, தமிழ் மக்கள் இந்நாட்டில் தங்கள் சுதந்திரத்தை ஒரு நாள் நிலை நாட்டியே தீருவார்கள்”**

இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் 22-7-76ல் பேசும்போது கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார். **‘அரசியல் திட்டத்தை பாதுகாக்க வேண்டிய நீதிமன்றங்கள், அதே அரசியல் திட்டத்தின் தகைமை பற்றி பிரச்சினை எழுப்புவதற்கு அனுமதிக்கப் படக்கூடாது”.** என்ற லங்கா சமசமாஜக்கட்சியினரின் அவசரப் பிரேரணைமீது பேசுகையிலேயே திரு. கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இப்பிரச்சினைமீது உடுப்பிட்டி பா. உ. திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

“தமிழர் கூட்டணி புதிய அரசியல் திட்டத்தை 1972 ஆம் ஆண்டே தீயிட்டுக் கொழுத்தியது நாடறிந்த விடயமாகும். அப்படி நாங்கள் அரசியல் சட்டத்தை தீயிட்டுக் கொழுத்திய போது எம்மை எவரும் கைது செய்யவில்லை. காங்கேசன்துறை இடைத் தேர்தலின்போது அரசியல் சட்டத்தின் தகைமைபற்றி நாம் சவால் விடுத்தோம். அப்போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சி அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு அரசியல் நிர்ணய சபையில் பல திருத்தங்களை தமிழ் மக்களின் சார்பாக சமர்ப்பித்திருந்தது. அதில்ஒன்றைக்கூட அரசாங்கம் ஆராய மறுத்த நிலையில் —நாம் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறினோம்.

தமிழ் மக்கள் தாங்கள் தனித்தேசிய இனம் — தனியொரு தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றே தங்க[illegible]கருதுகிறார்கள். [illegible]ந்த தேர்தலில் 49வீதமே இந்நாட்டு மக்களின் வாக்குகளைப்பெற்ற ஐக்கிய முன்னணி அரசுக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அதிகாரமில்லை; 51வீத வாக்குகள் அரசுக்கு எதிராக விழுந்திருக்கின்றன.

புதிய அரசியல் சட்டத்தை 1972ம் ஆண்டு மே 24ம் நாள் எங்கள் தலைவர் தந்தை செல்வா தீயிட்டுக் கொழுத்தி எரித்து தமிழ்மக்கள்இதைஏற்கமாட்டார்கள் என்பதை எடுத்துரைத்தார். அன்றிலிருந்து தமிழினம் இதை எதிர்த்துப்போராடி வருகிறது. எங்கள் சுயநிர்ணய உரிமையை பெறுவதற்காக எங்கள் இயக்கம் அஹிம்சை அடிப்படையிலான சட்டமறுப்புக்களையும், ஒத்துழையாமை இயக்கங்களையும் நடத்தி வருகிறது.

தமிழ் மக்கள் இந்நாட்டுச் சிங்கள மக்களுக்கு பல தடவைகளில் நேசக்கரம் நீட்டிய போதிலும்—இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிங்கள அரசியற் கட்சிகளினாலும் கடந்த காலங்களில் அவர்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். ஐக்கிய தேசியக்கட்சி தமிழ் மக்களை ஒரு தடவை ஏமாற்றியது; சிறீ லங்கா சுதந்திரக்கட்சி இரு தடவைகள் ஏமாற்றியது, தமிழ் மக்களின் மொழி உரிமைக்காக ஆரம்பத்தில் போராடிய லங்கா சமசமாசக்கட்சி அதிகாரத்தை குறுக்குவழியில் கைப்பற்றும் ஆசையில், தனது கொள்கையை கோட்டை விட்டது,

இந்நிலையில் தமிழ் மக்களுக்குள்ள ஒரே வழி, அஹிம்சை அடிப்படையில் போராடி எங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி எங்கள் தனிநாட்டை மீள அமைப்பதுதான்!

தமிழினத்தின் இந்த சுயநிர்ணய உரிமைக்காக போராடிய தமிழ் இளைஞர்கள் எவ்விதக் குற்றச்சாட்டுமின்றி 1972ம் ஆண்டுமுதல் சிறைகளில் அடைக்கப்பட்டுக்கிடக்கிறார்கள், அவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் இருக்குமானால், அரசு அவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டுவரவேண்டும், அல்லது விடுதலை செய்யவேண்டும். சிறையில் வாடும் 23 தமிழ் இளைஞர்கள் இன்று நீதிகேட்டு சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போகிறார்கள். அவர்களது உண்ணாவிரத இயக்கம் ஆகஸ்ட் 5ம் திகதியிலிருந்து ஆரம்பமாகப்போகிறது.

“அவசரகாலப் பிரமாணங்களின்கீழ் யாழ்ப்பாணம் மேல்நீதி மன்றத்தில் என்மீது அரசு வழக்குத் தொடருமானால் — என்னால் அந்தப் பிரமாணங்களுக்கு சவால்விட முடியும். சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்!”

—இவ்வாறு ஜெயக்கொடி பேசினார்.

## மூன்றரை ஆண்டுகள் நீதிவிசாரணையின்றி சிறையில் வாடுகிறார் சத்தியசீலன்!

### இளைஞர்களின் சத்தியப் போராட்டம் ஆகஸ்ட் 5-ல்!

**அரசே எம்மை விடுதலை செய், அல்லது விசாரணைக்குக்கொண்டு செல்; என்ற நீதியான கோரிக்கையை முன்வைத்து சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களில் 23 பேர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்து விட்டனர். இவர்களது உண்ணாவிரதப் போராட்டத்தின் முதலாவது கட்டம் 5-8-76ல் ஆரம்பமாகிறது. அன்றைய தினம் ஆறு தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறார்கள். நீதி விசாரணையின்றிநீண்டகாலமாக ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகளாக—அடைத்துவைக்கப்பட்டிருக்கும் இளைஞர் ஒருவரைப்பற்றிய சிறு குறிப்பு இது!**

யார் இந்த சத்தியசீலன்? 1968ம் ஆண்டிலே பல்கலைக் கழக வட்டாரங்களில் பலமாக எழுப்பப்பட்ட கேள்வி இது. வசீகரப் புன்னகை; ஆழமான சிந்தனை; இடியென முழங்கும் பேச்சாளர் தூங்கிக்கிடந்த தமிழ் இளைஞர் சமுதாயத்தினை கட்டியெழுப்பியவர்களில் ஒருவர் ஆம், இவ்வளவு அம்சங்களையும்கொண்டவர்தான் பொ. சத்தியசீலன் பி. ஏ.

1967ம் ஆண்டில் இளைஞர் சமுதாயம் எங்கும் தூங்கிக் கிடந்தது. ஏன்? தமிழ்ச் சமுதாயமே அயர்ந்து கிடந்தது. இந்நேரத்திலே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனிய வளாகத்தின் சரித்திரப் பகுதியிலிருந்து எழுந்தது “நமக்கொரு நாடு” வேண்டுமென்ற குரல். இக்குரல் வேறு யாருடையதுமல்ல, கடந்த மூன்று ஆண்டுகளாக விசாரணையோ அன்றேல் விடுதலையோ செய்யப்படாது சிறையில் வாடும் பொ.சத்தியசீலனுடையதே.

இளைஞர்களையும், மாணவர்களையும் ஒன்றிணைத்து இயக்கமொன்றைத் தாபிக்க வேண்டும் என்ற நோக்குடன் பல்கலைக் கழகத்தில் “இளைஞர் ஒன்றியத்தை ஆரம்பித்தார்.” இளைஞர் ஒன்றியம்’ வெளியிட்ட மாதாந்த நூலுக்கு. ஆசிரியராக இருந்த இவர் அந்நூலின் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களுக்குக் குறிப்பாகத் தமிழ் மாணவர்கட்கு அளிக்கப்படும் அநீதிகளை உலகத்திற்குப் பறைசாற்றினார். பல்கலைக்கழக வளாகங்கள் யாவற்றிலும் தமிழ் விழாக்கள் கருத்தரங்குகள் ஒழுங்குசெய்வதில் முன்நின்ற இவர் போகுமிடமெல்லாம், பேசுமிடமெல்லாம் ஆதாரபூர்வமாகபேராசிரியர்களே வியந்து நிற்கும் வண்ணம் தமிழர்கள் ஏன் “பூரண சுயாதிக்கம்பெற்ற சுதந்திர தமிழ் நாடு” அமைக்கப்போராடவேண்டுமென எடுத்துரைத்தார்.

துட்டகெமுனு — எல்லாளன் யுத்தம் பற்றி அலசி ஆராய்ந்த இவர் இளைஞன துட்டகெமுனு வயது முதிர்ந்த எல்லாளனை வீரத்தினால் முறியடிக்கவில்லை, ஆனால் தந்திராபோயங்களினால் யுத்த தர்மத்திற்கே ஏற்காத வழியினால் தோற்கடித்தான் எனச்சான்றுகளுடன் விளக்கியபோது இவரைப்பாராட்டாத கல்விமான்களே இல்லை எனலாம். தமிழன் ஒரேயொரு யுத்தத்தில் மாத்திரம், அதுவும் ஏமாற்றுவித்தையினால், தோற்கடிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் சிங்களவர்களோ 16 யுத்தங்களில் தமிழர்களினால்தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை சரித்திர ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டி தமிழனின் மேன்மையை தமிழ் இளைஞர்களை உணரச்செய்தார். பல்கலைக் கழகத்திலே இவர் ஆற்றிய தமிழ் சேவை பற்றி ஒரு புத்தகமே எழுதலாம்.

1970ம் ஆண்டிலே கலை இளவல் சிறப்புப பட்டத்தைப் (B A. Hons) பெற்ற இவர் தமிழ் ஈழம் ஏகினார். இவருக்கு ஆசிரியர் வேலையைக்கொடுக்கப்பல தனியார் பாடசாலைகள் உட்பட கல்வித் திணைக்களமே தயாராக இருந்தது. ஏன், இவர் வேண்டுமானால் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளர் பதவியே எடுத்திருக்கலாம். இவரின் கல்விப [illegible] பதவியொன்று எடுத்து வறுமையிலே வாடும் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதை விடுத்து, இறந்துகொண்டிருக்கும் தமிழ் சமுதாயத்தைக் காப்பாற்றுவதே தன்னுடைய கடமை என உணர்ந்த இவர் அதற்கான பணிகளில் இறங்கினார்.

தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாழடித்து வருங்காலம் தமிழர் சமுதாயத்தையே அடிமைகளாக்குவதற்கு வழிகோலும் “தரப்படுத்தல்” திட்டத்தை வன்மையாக எதிர்த்த இவர், இதனைப்பயன்படுத்தி மாணவர்களை ஒன்று சேர்க்கும் நோக்குடன் “தமிழ் மாணவர் பேரவை”யை ஆரம்பித்தார். “தமிழ் மாணவர் பேரவை” ஆரம்பிக்கப்பட்டு மூன்று நாட்களுக்குள் நடாத்தப்பட்ட “தரப்படுத்தல்” எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது 25,000 மாணவர்கள் கலந்துகொண்டு மாணவர்கள் விடுதலைப்போருக்குத் தயார் எனப் பறைசாற்றினர்;

பின்னர் இவர் மட்டுநகரில் நடாத்திய ஊர்வலத்தின்போதும் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

பட்டி தொட்டிகளெல்லாம் இவர் பரப்பிய ‘பூரண சுயாதிக்கம் கொண்ட சுதந்திரத் தமிழ்நாடு’ பிரசாரம் கண்டு அஞ்சிய அரசு இவரை எப்படியாவது அடக்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிற்று. இவர் யாழ் மாநகரில் இல்லாதிருந்தும் துரையப்பாவின் காருக்குக் குண்டு வைத்த சம்பவத்தில் இவரை மாட்டிவிட முனைந்தது அரசு. இச் சம்பவத்திற்காகக் கைதுசெய்யப்பட்ட தியாகி சிவகுமாரனைத் தூண்டிவிட்டவர் இவர்தான் எனக் கைது செய்ய முனைந்தனர்,

இத் தடைகளையெல்லாம் பொருட்படுத்தாது ஏறக்குறைய இரு ஆண்டுகள் ஈழத்தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று நமக்கொரு நாடு ஸ்தாபிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். இதற்காக இவர்பட்ட இன்னல்கள் சொல்லிலடங்கா. சில வேளைகளில் உண்ண உணவின்றி, படுக்க இடமின்றி ஈழத்தமிழ் இளைஞர்களை ஒன்றுபடுத்த இரவு பகலாக, கடுமையான பொலிஸ் வேட்டைக்கிடையில், செயல்பட்டார்.

இறுதியில் 20-2-[illegible]73ம் ஆண்டு மட்டுநகரில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார். தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டும், அடிமைப் பட்டிருக்கும் எமது தாயகம், ஈழத்தமிழகம் விடுதலையடையவேண்டும்! எனக் கோரிக்கை விடுத்ததைத்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய சிங்கள நாடு தயாரித்த அரசியல் சட்டத்தின் ஆளுகைக்கு அடிபணிய மறுக்கிறது தமிழ் ஈழம்!

**"இரு நாடுகளின் சட்ட மன்றங்களும் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் விரும்பி சட்டமியற்றி ஒரு நாடாக சங்கமமாவதற்கு அதிகாரம் அளிப்பதன் மூலமும், ஒரு நாட்டை மற்ற நாடு ஆக்கிரமிப்பதன் மூலமும், ஒரு நாடு தனது அரசுரிமையை மற்ற நாட்டிற்கு தாரை வார்த்துக் கொடுப்பதன் மூலமும், இரு நாடுகளும் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின் மூலமும், இரு நாட்டு மக்களின் விருப்பத்தின் மூலமும்தான், இரு நாடுகள் ஒரு நாடாக முடியும். ஆனல் யாழ்ப்பாண அரசு என்றுபண்டைக் காலத்தில் அழைக்கப்பட்டு வந்த தமிழ் ஈழ நாட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெருமலேயே வேற்று நாட்டுக்காரர்களான சிங்கள ஆட்சியாளர்கள் புதிய அரசியல் சட்டத்தை தாம் விரும்பியபடி எதேச்சாதிகாரமாகத் தயாரித்து, அதனை தமிழ் மக்களின் தொண்டைக்குள் — தனித் தமிழ் ஈழத்தின் தொண்டைக்குள் வலிந்து சட்டவிரோதமாகத் திணித்துள்ளார்கள்!**

—இவ்வாறு தமிழ்த் தலைவர்களுக்கெதிரான வழக்கில் தமிழ்த் தலைவர்கள் சார்பில் நீதிபதிகள் குழாம் முன்னர் உரைநிகழ்த்திய திரு. மு. திருச்செல்வம் குறிப்பிட்டார்.

**இந்தியாவின் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கு இல்லாத அரசுரிமையும் சுதந்திரமும் இறைமையும் யாழ்ப்பாண ராஜ்யத் தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள். 1619ம் ஆண்டில் யாழ்ப்பாண ராஜ்யத்தின தமிழர்கள் தாங்கள் இழந்த மேற்படி உரிமைகளை 1972ம் ஆண்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் கொண்டிருந்த தொடர்புகளை துண்டித்துக்கொண்டதுடன மீண்டும்** புத்திட்டத்தின் கீழ் தான் நியமிக்கப்பட்டிருக்கிறோம்.

'திரு:' மதிப்புக்குரிய நீதிபதி அவர்களே! நீங்கள் கூறும் புதிய அரசியல[illegible] புத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தானே எதிரிகள் போராட்டத்தில் இறங்கினர்கள்.


நீதி. சில்வா: எங்களுக்கு இந்த வழக்கை விசாரிப்பதற்கு மாத்திரமே அதிகாரம் இருக்கிறது என்று சட்டமா அதிபர் சுட்டிக்காட்டினரல்லவா?

'திரு': ஐயா! நீங்கள் மூவரும் இலங்கையின் பழைய கொண்டதல்ல. அதற்கு அவ்விதமான பலமும் இல்லை.

பழைய அரசியலமைப்புத் திட்டத்தின் மூலம் பதவி அதிகாரம் பெற்று மேல்நீதிமன்ற நீதிபதிகளாகவே இன்று இங்கு ஒன்றுகூடியிருக்கும் நீங்கள் மூவரும் உங்களுக்குரிய சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிவழங்கவேண்டும்.

**யாழ்ப்பாண முடியரசு**

1619ம் ஆண்டில் யாழ்ப்பாண முடியரசு போர்த்துக்கீஸரின் ஆக்கிரமிப்பினல் **வாக்கப்பட்ட ஒரு புதிய அரசியலமைப்புத திட்டத்தை தமிழ மக்கள்**



**தொண்டைக்குள் திணித்துவிட்டனர்.**

**அரசியலமைப்பு சட்டவிரோதம்**

1972ம் ஆண்டில் புதிய அரசியலமைப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தும் வேளை

நீதி. சில்வா: மேற்படி தீர்ப்பை வழங்கிய பாகிஸ்தானின் பிரதம நீதியரசர் பழைய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் தான் நியமனம் பெற்றார். அதனல் அவருக்கு புதிய அரசியலமைப்புத் திட்டத்துக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கும் உரிமையிருந்தது. ஆனல் நாம் புதிய அரசியலமைப்புத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருப்பதனல் அதற்கெதிராக தீர்ப்பு வழங்கமுடியாத சட்டபூர்வமாக அதிகாரமற்ற நிலையிலிருக்கின்றோம்.

திரு: ஏன் இங்கு அமர்ந்திருக்கும் இரு நீதிபதிகளான திரு. சோஸாவும், திரு. சிவாசெல்லையாவும் பழைய அரசியல் திட்டத்தின் கீழ் தானே நீதிபதிகளாக நியமிக்கப்பட்டார்கள்...?

நீதி: சில்வா: அவர்கள் இருவரும் மாவட்ட நிதிபதிகளாக இருந்தது உண்மைதான். ஆனல் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் தான் அவர்களும் என்னைப்போல் மேல் நீதிமன்ற

# இந்தியத் தமிழ் நாட்டுக்கில்லாத அரசுரிமை ஈழத்தமிழ் நாட்டுக்கு உண்டு!

**பெற்றுக்கொண்டார்கள். ஆனல் அதேவேளையில் 1947ம் ஆண்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியா மீது வைத்திருந்த தனது ஆட்சி அதிகாரத்தை இந்திய அரசியல் நிர்ணய சபையிடம் ஒப்படைத்தமையினல் தான். இந்தியாவின் தமிழ் நாட்டுத் தமிழர்கள் இந்த அதிகாரத்தை இழந்துவிட்டார்கள் என்றும் திரு திருச்செல்வம் மேலும் சுட்டிக்காட்டினர்.**

திரு. திருச்செல்வம் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளாகிய நீங்கள் மூவரும் இலங்கைக் குடியரசுக்கும் இலங்கை அரசியலமைப்புத் திட்டத்துக்கும், சட்டத்துக்கும் விசுவாசமாக இருப்போமென்று சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் அரசியல் அமைப்புத் திட்டத்தை மட்டுமல்லாது சட்டத்தையும் பாதுகாப்பது மிகமிக அவசியமாகும். அரசியலமைப்புத் திட்டத்துக்கும் சட்டத்துக்கும் இடையில் மோதல் வரும் பட்சத்தில் நீங்கள் சட்டத்துக்கே முக்கியத்துவம் அளித்து அதனைப் பாதுகாக்கவேண்டும்,

நீதிபதி சில்வா: மிஸ்டர் திருச்[illegible]ல்வம், நீங்கள் கூறுவதைப்போல நாங்கள் பழைய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படவில்லை. புதிய அரசியலமைப்புத்திட்டத்தின் கீழ் பதவிப்பிரமாணம் செய்தவர்கள் என்பதோடு நீதிபரிபாலன முறையில் சட்டபூர்வமான நீதிபதிகளாக பழைய அரசியலமைப்புத்திட்டப்படியே நியமிக்கப்பட்டவர்களாவீர்கள்.

நீங்கள் மூவரும் பழைய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர்கள். அதோடு மேல் நீதிபதிகள் என்ற சட்டபூர்வ அதிகாரமும் கொண்டவர்கள், பழைய அரசியலமைப்புத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நீதிபதிகள். நாங்கள் ஏற்றுக்கொள்ளாத புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்த நீதிமன்றம் புதிய அரசியலமைப்புத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத எதிரிகள் மீது விசாரணை நடத்தும் அதிகாரத்தை பெறமுடியாது.

எனவேதான் சர்வ வல்லமையுடன் மேல்நீதிமன்ற நீதிபதிகளாக அதிகாரம் பெற்ற நீங்கள் மூவரும் இந் நீதிமன்ற அமைப்பு முறைக்கு எதிரான எமது வாதத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றல் நாங்கள் ஏற்றுக்கொள்ளாத புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந் நீதிமன்றம் சட்டப்பூர்வமாக விசாரணை நடத்தும் அதிகாரம் தனது அரசுரிமையையும் சுதந்திரத்தையும் இறைமையையும் இழந்தது. அதுமுதல் 1972ம் ஆண்டுவரை போர்த்துக்கீஸர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் ஆகியோரின்கீழ்இந்நாட்டுமக்கள் சுதந்திரத்தையும் இறைமையையும் அரசுரிமையையும் பறிகொடுத்திருந்தார்கள். ஆனல் 1972 மே 22ம் திகதியன்று ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் கொண்டிருந்த அரசியல் ரீதியான பிணைப்பினைத் துண்டித்துக் கொண்டவுடன் 1619 ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைக்கு யாழ்ப்பாண ராஜ்யத்தின் தமிழ் மக்கள் தள்ளபபட்டனர். **அதாவது யாழ்ப்பாண ராஜ்யத்தின் தமிழ் மக்கள அரசுரிமையையும் சுதந்திரத்தையும் இறைமையையும் தாஞகவே பெற்றுவிட்டனர்.**

**இவ்வேளையில்தான் சிங்கள ஆட்சியாளர்கள் அரசியல் நிர்ணய சபை என்ற ஒருதலைப்பட்சமான பேரவையை ஏற்படுத்தி தமிழ் மக்களைச் சதிததிட்டம் போட்டு ஏமாற்றி, தங்கள் விருப்பத்திற்கேற்ப உரு**யில் பண்டைய யாழ்ப்பாண ராஜ்யத்தின் அரசுரிமையும் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழ்நாட்டு மக்களின் பூரண அங்கீகாரத்தைப் பெற்றுத்தான் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் சார்பிலும் அரசிலமைப்புத் திட்டத்தை தயாரித்திருக்க வேண்டும். ஆனல் அதற்கு மாருக தமிழ் மக்களின் அரசுரிமையையும் சுதந்திரத்தையும் இறைமையையும் உதாசீனம் செய்து, சிங்கள ஆட்சியாளர்கள் உருவாக்கியிருக்கும் அரசியலமைப்புத் திட்டம் சட்ட விரோதமானது என்பதே எனது நிலையாகும்.

பாகிஸ்தானின் பிரதம நீதியரசர், தங்கள் நாட்டின் அரசியலமைப்புத் திட்டத்துக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இருக்கிறது என்று சர்வதேச நீதிபரிபாலன அரங்கில் பரபரப்பை ஏற்படுத்திய தமது தீர்ப்பில் வெற்றிகரமான ஒரு புரட்சியின் மூலம், அல்லது சதிமுயற்சியின் மூலம் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களையும் சட்டபூர்வமான ஆட்சியாளர்கள் என்று சர்வதேச ரீதியில் அங்கீகரித்தேயாகவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளாக நியமிக்கப்பட்டார்கள். அப்படியானல் எங்கள் மூவருக்கும் நாங்கள் நியமனம் பற்றி அரசியல் அமைப்புத்திட்ட திற்கெதிராக தீர்ப்பு வழங்குவதற்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

திரு: மதிப்புக்குரிய நீதிபதிகளே! நீங்கள் சட்டத்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் சட்டம் மீறப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை பாதுகாப்பதற்கு தயங்கவே கூடாது. அதனல் உங்களுக்கு அரசியலமைப்புத் திட்டத்தை எதிர்த்து தீர்ப்பு வழங்குவதற்கும் சட்டபூர்வமான அதிகாரம் இருக்கிறது.

**சுயநிர்ணய உரிமை சட்டவிரோதம் அல்ல**

'இந்நீதிமன்றம் இந்நாட்டு சட்டதிட்டங்களுக்கு மட்டும் அல்லாது சர்வதேச சட்டங்களுக்கும் மதிப்பளித்து தங்கள் தீர்ப்பை வழங்குவது மிகமிக அவசியமாகும். சர்வதேச சட்டப்படி அரசியல் சுயநிர்ணய உரிமையை நிர்ணயிக்கும் முயற்சியை ஒரு குற்றமாகக்காத முடியாது. எனவே, எதற்கமைய எதிரிமீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை நாம்

—6-ம் பக்கம் பார்க்க

# நீதிமன்றத்தில் திருச்செல்வம் பேருரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எழுதுவினைஞர் சங்கத் தேர்தல்!

## எண்ணம்

### ஐ. தே. கட்சியின் சுயரூபம் அம்பலம்!

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசியல் சட்டமொன்றைக் கொண்டுவரும்; அதில் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கப்படும்; என்றெல்லாம் ஐக்கிய தேசியக்கட்சியினர் நாளதுவரையில் நடத்தி வந்த பிரசாரம் அத்தனையும் ழுழுப்பொய் என்பது இப்போது அம்பலமாகிவிட்டது!

தமிழ்பேசும் மக்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றித் தங்கள் வலையில் வீழ்த்திக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி நடத்திவந்த ஏமாற்று நாடகத்தின் திரை இப்போது விலக்கப்பட்டுவிட்டது; குட்டு உடைந்துவிட்டது!

இந்தத் திரையை விலக்கியவர் வேறு யாருமல்ல— ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் சாட்சாத் ஜே. ஆர். ஜெயவர்த்தனவேதான்!

அண்மையில் (22-7-76) அரசியலமைப்புத்திட்டத்தின் தகைமை பற்றி தேசிய அரசுப்பேரவையில் லங்கசமசமாசக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கொண்டுவந்த அவசரப் பிரேரணைமீது ஜே. ஆர். ஜெயவர்த்தன, பேசியபோது சாக்குக்குள் இருந்த பூனையை வெளியே அவிழ்த்து விட்டிருக்கிறார்! புதிய அரசியலமைப்புபற்றி ஐக்கிய தேசியக்கட்சியின் நிலையை விளக்கியிருக்கிறார்!

**"புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபைக்கு அதிகாரமுண்டென்பதை ஐ. தே. கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது; அரசியல் சட்டத்துக்கு எதிராக ஐ. தே. கட்சி வாக்களித்த போதிலும், பெரும்பான்மையினரால் அச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டபின்னர், அதை அப்படியே ஐ தே. கட்சியும் ஏற்றுக்கொண்டுவிட்டது; இந்த முடிவில் இனி மாற்றத்துக்கு இடம் கிடையாது."**

இவ்வாறு திட்டவட்டமாகக் கூறிய ஜே. ஆர், ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்வதும், சுதந்திரமான நீதிப்பரிபாலனமுமே இப்போதைய அரசியல் திட்டத்தில் தாம் செய்யவிரும்புகிற மாறுதல்கள் என்று கூறிவிட்டார்!

ஐ. தே. கட்சித்தலைவரான ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்விதம் தேசிய அரசுப்பேரவையில் அரசியலமைப்புத்திட்டம்பற்றி கருத்துத் தெரிவித்துவிட்டபின்னர், அவருடன் இன்னும் தொங்கிக்கொண்டிருக்கும் கல்குடா பா. உ. திரு. தேவநாயகமும், புதிதாக தமிழ் பகுதியில் முளைத்துவரும் யானைக்கட்சி அமைப்பாளர்களும் இனியும் என்ன சொல்லப்போகிறார்கள்?

ஆக, யூ. என். பி. வந்தாலென்ன — வேறு எந்தச் சிங்களக்கட்சி ஆட்சிக்கு வந்தாலென்ன — தமிழினத்தினுடைய ஆளப்படும் அடிமை நிலை ஒருபோதுமே மாறப்போவதில்லையென்பதை தமிழ் மக்கள் உணரவேண்டும்!

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இந்த அறிவிப்பு— யூ. என். பி. யில் இன்னும் அற்பசொற்ப நம்பிக்கை வைத்திருக்கும் ஒருசில தமிழர்களின் கண்களையும் திறக்கச்செய்யுமென்று நம்புகிறோம்.

---

## அரசாங்க ஊழியர் பிரச்சினைகளில் தமிழ்த் தலைவர்கள் ஆற்றிய பணி!

ஜூலை 31ம் திகதி சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் 15வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருந்தொகையான உறுப்பினர்கள்கலந்து கொள்கின்றனர். சென்ற சிலநாட்களாகவே கொழும்பிலிருந்தும் பிற இடங்களில் இருந்தும் உறுப்பினர்கள் பலர் யாழ்ப்பாணம் நோக்கி சென்றுள்ளனர்.

தனிச்சிங்களச்சட்டத்தை எதிர்த்து 15 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப் பட்ட மொழிவழித் தொழிற் சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இவ்வாண்டுப் பொதுக்கூட்டம் மிகவும் விறுவிறுப்பாகவும் உறுப்பினர்களிடையே புத்துணர்ச்சியை அளிப்பதாகவும் அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது. தாய்ச் சங்கச்செயற்குழுவினுல்பொதுச் சபைக்குச் சமர்ப்பிக்கப் பட இருக்கும் தீர்மானங்கள் பலவும் தமிழ் அரச ஊழியர்களையும், தமிழ் இனத்தையும் விழிப்புணர்ச்சியுடன்செயல் படவைப்பதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவுடன் அன்று ஆரம்பிக்கப் பெற்று அதன் தலைவர்களின் வழிகாட்டுதலுடனும் ஒத்துழைப்புடனும் தமிழ் எழுதுவினைஞர்களின் பிரச்சினைகளில் மாத்திரமன்றி, பல்வேறு விடயங்களிலும் அளப்பரிய பணிகளைப் புரிந்து வந்துள்ளது. தந்தை செல்வா, திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. தளபதி அமிர், இரும்புமனிதர் டாக்டர் நாகநாதன் ஆகியோர் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் போராட்டங்கள் பலவற்றிற்கும் அளித்து வந்த ஆதரவை சங்கத்தின் ஆண்டறிக்கைகளும், ஏடுகளும் அன்று துலாம்பரமாக விளக்கி வந்துள்ளன.

தமிழின வரலாற்றில் மறக்க முடியாத அம்சமான கோடீஸ்வரன் வழக்கின் வெற்றிக்காக தந்தைசெல்வாவும், திரு. மு.திருச்செல்வம் அவர்களும்ஆற்றியபணிகளை [illegible]றியும். அன்று சங்கத்தின் செயலாளராக பதவி வகித்த திரு. இ.பாலசுப்பிரமணியம் அவர்கள் கோடீஸ்வரன் வழக்கின் மூத்த வழக்கறிஞரான திரு. திருச்செல்வம் அவர்களுக்கு பக்க பலமாக நின்று உழைத்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

இவற்றைத் தொடர்ந்து 1964ம் ஆண்டு பழையதமிழ் அரச ஊழியர்கள் பலர் கட்டாய ஓய்வில்அனுப்பபெற்ற சமயம், தமிழரசுக்கட்சியின் சார்பாக திரு.திருச்செல்வம் அவர்கள் பிரதம அமைச்சரைக் கண்டு கோடீஸ்வரன் வழக்கை ஆதாரம் காட்டி இத்தகைய கட்டாய ஓய்வு அறிவித்தல்களைவாபஸ்பெறு மாறுவாதாடி வெற்றி பெற்றமையை இன்று சிலர் மறந்திருக்கலாம்.

பின்னர் 1965 ம் ஆண்டு தமிழ் மக்களின் உரிமைக்காகத் தேசிய அரசாங்கத்தில் தமிழ்க் கட்சிகள் அங்கம் வகித்துப் போராடிய பொழுது, தமிழ் இனத்தின் அடிப்படை உரிமைகளுக்கு மேலாக அரச ஊழியர்களின் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தியதையும், அரச ஊழியர்கள் விடயத்தில்கணிசமான அளவு வெற்றியை ஈட்டிக் கொடுத்ததையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கொள்வது பொருந்தும்.

தமிழ் ஊழியர்களின் நன்மையைத்தமிழ்த்தலைவர்கள் மேலாகக் கருதிச் செயற்பட்டதைக்கூட மறந்து தமிழ் தலைவர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களை சென்ற ஆண்டு மட்டுநகரில் நடந்தேறிய 14வது ஆண்டுப் பொதுக்கூட்டம் இனம் கண்டுகொண்டுவிட்டது.

சங்க நிருவாகத்தைப் பொறுப்பேற்று சென்ற ஓராண்டாக செயல்பட்டு வந்த தலைமைப்பீடம் சங்கத்தின் ஆரம்பகால இலட்சியங்களையும் கொள்கைகளையும் மீண்டும் மதித்து தமிழ் ஊழியர்களுக்கும் தமிழ் இனத்திற்கும் ஆற்றிய செயற்கரிய பணிகள் தமிழ் மக்கள் மத்தியில் சங்கத்திற்கு பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.

இச்செயற்குழு தமிழர் கூட்டணியின் தலைவர் மூதறிஞர் செல்வா, இணைச் செயல் அதிபர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர்களினுலும் ஏனைய தலைவர்களினுலும் அமோகமான பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. சங்கத்தின் 15வது ஆண்டறிக்கையை நடுநிலைக் கண்கொண்டு ஆராயும் ஒருவருக்கு இவர்களின் செயற்திறன்களும் இவர்களுக்கு சங்கத்தின் அடிப்படை இலட்சியத்தில் உள்ள நம்பிக்கையும், கொள்கைப் பற்றும் எதற்றெனவிளங்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நம்பிக்கையைப் பெற்று மீண்டும் போட்டியிடும் இவர்களுக்கு உறுப்பினர் மத்தியில் உள்ள அபரிமிதமான செல்வாக்கு அவர்களின் வெற்றியை ஊர்ஜிதம் செய்கின்றது.

அன்று பழைய அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து கோடீஸ்வரன் வழக்கை நடாத்திய அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இன்று புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து சட்டமறுப்புச் செய்த தமிழ் தலைவர்களின் வழக்கிற்குப் பக்கபலமாக இருந்து செயல்பட்டுவருவது பாராட்டத்தக்கது.

---

### கூட்டணி ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் இவர்கள்தாம்!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் ஆதரவுடன் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தேர்தலில் பின்வரும் பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் இவர்கள்தான்.

தலைவர்:- திரு. க. சோதிலிங்கம். துணைத்தலைவர்கள்:- திரு. க. குலநாயகம், திரு. சி. சோதிநாதன். பொதுச்செயலாளர்:- திரு. இ. பேரின்பநாயகம். துணைச் செயலாளர்கள்:- திரு. சி. இரத்தினவடிவேல், திரு. கா. சிவசிதம்பரம். பொருளாளர்:- திரு. கி. சதாசிவம். துணைப்பொருளாளர்கள்:- திரு. சி. சண்முகம், ந. சிவரஞ்சன்.

செயற்குழுவுக்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து 14 பேரையும் வெளிமாவட்டங்களிலிருந்து 9 பேரையும் இவ்வணிபோட்டிக்கு நிறுத்தியுள்ளது. வவுனியா தலைமை அலுவலகத் தொடர்பு அலுவலர் திரு. க. கந்தையா செயற்குழுவுக்கு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

தமிழ்த்தேசிய இனம் புனிதமான சுதந்திரப்போராட்டம் ஒன்றில் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது. தங்கள் தாயகத்தைமீட்டு, அங்கு தமிழர் ஆட்சியை தோற்றுவிக்கும் புனிதபணியில் தமிழ் சமுதாயம் ஈடுபட்டிருக்கிறது!

கட்சி கடந்த நிலையில் — கருத்துவேறுபாடுகளற்ற நிலையில்—சுதந்திரம் என்ற ஒரே சிந்தனையுடன் தமிழ் சமுதாயம் செயற்படவேண்டிய நேரம் இது!

தமிழ்ப்பேசும் தொழிலாளர்களுக்கு இந்த இயக்கத்தில் முக்கிய பங்குண்டு; பணியுண்டு. அதையுணர்ந்து செயற்படும் மொழிவழித்தொழிற்சங்கங்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதுதான் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமாகும்!

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்த் தலைவர்களின்— குறிப்பாக தமிழரசுக்கட்சித் தலைவர்களின் அனுசரணையுடனும், ஆதரவுடனும், உதவியுடனும் செயற்பட்டு வரும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், தமிழ்அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளுடன் மட்டும் தன்னைக்கட்டுப்படுத்திக்கொள்ளாது தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டத்துக்கும் பக்கபலமாக விளங்கி வருவதை எவரும் பாராட்டாமலிருக்கமுடியாது!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், இவ்வாறு செயல்படுவதற்குக் காரணம் சங்கத்தின் இலட்சியத்தையும் தமிழ் சமுதாயத்தின் விடுதலையையும் இணைத்துசெயற்படக்கூடிய சிறந்த இலட்சிய வீரர்களின் கரங்களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுவருவதுதான்!

தமிழினத்தின் ஒரேயொரு விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணியின் இலட்சியங்களுக்குப் பக்கபலமாக நின்று வெளிவெளியாகச் செயற்படக்கூடியவர்கள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆட்சிக் குழுவுக்கு தெரிவுசெய்யப்பட்டால் மட்டுமே சங்கத்தின் பணி, தமிழினத்தின் தேசிய விடுதலை இலட்சியத்துக்கும் பயன்படமுடியும்!

ஆற்றிலொருகாலும் சேற்றிலொரு காலும் வைப்பவர்கள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆட்சியை கைப்பற்றினுல்—அதனுல் சங்கத்துக்கும் இலாபமில்லை— தமிழ் சமுதாயத்துக்கும் இலாபமில்லை!

எனவே தமிழர் விடுதலைக்கூட்டணிக்குப் பக்கபலமாக இருக்ககூடியவர்களை—வெளிப்படையாகவே கூட்டணியுடன் தம்மை இணைத்துக்கொண்டு செயல்படக்கூடியவர்களை—அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆட்சிக்குழுவுக்கு சங்க உறுப்பினர்கள் தெரிவுசெய்வார்கள் என்று நம்புகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீத்தார் நினைவு



மறைவு :28-7-1976

செவ்வந்திப்
பூச்சரமே—நினைவால்
சிந்தை அடிக்குதம்மா!

# உண்ணாவிரத முடிவின் எதிரொலி!

# 15 இளைஞர்கள் விடுதலை!

## சிறையில் மீதியிருப்போர் தொகை 29!

ஆகஸ்ட் ஐந்துக்கு முன்னர் தம்மை விடுதலை செய்ய வேண்டுமென்றும், இன்றேல் நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டுமென்றும், இவை இரண்டிலும் ஏதாவது ஒன்றை அரசு செய்யத் தவறுமானல் ஆகஸ்ட் 5ம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவிருப்பதாகவும், சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் காலக்கெடு விதித்து பிரதமருக்கு அறிவித்திருந்ததன் எதிரொலியாக சிறையில் இருந்த 15 தமிழ் இளைஞர்கள் இதுவரை விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்; ஏழு இளைஞர்கள் மீது துரையப்பா கொலை சம்பந்தமாக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. இன்னும் 29 இளைஞர்கள் விடுதலை செய்யப்படாமல் உள்ளே வைக்கப்பட்டுள்ளனர்.

நான்கு ஆண்டுகளாக எவ்வித விசாரணையுமின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ். நீராவியடியைச்சேர்ந்த 24 வயது இளைஞரான நா. அமரசிங்கம் கடந்த 21-7-76ல் விடுதலைசெய்யப்பட்டார். இவர் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதற்கு ஒரு கிழமைக்கு முன்னர், யாழ் சிறைச்சாலையில் ஏழு மாதங்களாக வைக்கப்பட்டிருந்த ரமணீகரன், கந்தசாமி ஆகிய இரு இளைஞர்களும் விடுதலைசெய்யப்பட்டனர்.

மூன்றரை ஆண்டுகளாக கண்டி போகம்பரை சிறையில் விசாரணையின்றி வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஞா. ஞானசேகரம் யாழ்ப்பாணத்துக்குகொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து 28-7-76 புதன்கிழமை காலை விடுதலைசெய்யப்பட்டார். இவர் கைது செய்யப்பட்ட திகதி. 15-1-73

திரு. ஞானசேகரம் தற்போது சிறையிலிருந்ததன் காரணமாக சுகவீனமாக இருக்கிருர்.

இதே போல, துரையப்பா கொலையைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு, கடந்த ஓராண்டாக வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த பின்வரும் 11 தமிழ் இளைஞர்கள் யாழ்ப்பாணம் கொண்டுசெல்லப்பட்டு அங்கு விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். அரசியல் கூட்டங்களில் பேசக்கூடாது என்றும், யாழ் மாவட்டத்தைவிட்டு வெளியேறக் கூடாது என்றும் இவர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

குறித்த 11 இளைஞர்களும் வருமாறு:- பி. சற்குணலிங்கம், எஸ். குருகுலசிங்கம், கே. பாலேந்திரன், எஸ். சபாரத்தினம், ஏ. தாசன், எம். பாலரத்தினம், சூரியகுமார், அ. நித்தியானந்தன், எஸ். குலசிங்கம் எஸ். இராசகுலசூரியர், முருங்கன்— ஜெயராசா.

விடுதலையாகி வெளியே வந்த இவர்களுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் எழுச்சிமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ் மேயரும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருமான அல்பிறட் துரையப்பாவை கொலை செய்ததாகவும், கொலைசெய்யச் சதிசெய்ததாகவும் குற்றம் சுமத்தி ஏழு இளைஞர்கள் மீது சட்டமா அதிபதி உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார். அவர்களது பெயர்கள் வருமாறு:- பி. கலாபதி, வீ. ஏ. கிருபாகரன், எஸ். லோகநாதன், வி. ஸ்ரீதரன், டி. சந்ததியார், கே. விஸ்வசோதி இரத்தினம் அல்லது இன்பம், எஸ். செல்வக்குமார்.

தற்போது விசாரணையின்றி சிறையில் எஞ்சியிருப்போர் தொகை 29 ஆகும்.

## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

சிங்கள்த்தலைமையின்மை காரணமாக துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ் ஊழியர் பிரச்சினை சம்பந்தமாக தாம் நடவடிக்கையெடுப்பதாக கப்பல் தொழில் சுற்றுலா பிரயாண அமைச்சர் திருமலை பா. உ. திரு. நேமிநாதனுக்கு வாக்குறுதியளித்ததைத்தொடர்ந்து 30-7-76ல் நடைபெற விருந்த உண்ணாவிரதம் பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்தொழிற் சங்கக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தன் தெரிவித்தார்.

## நூற்றுக்கணக்கான...

—8-ம் பக்கத் தொடர்

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தங்கள் முதுகுகளில் முட்களைப் பாய்ச்சி காவடி ஆடி வந்த காட்சி, பக்தி பரவசத்தை ஊட்டிய அதே வேளையில் ஆட்சியாளர்களின் எத்தவிதமான சித்திரவதைகளுக்கும் அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றூர்கள் என்பதையும் சொல்லாமற்சொல்லியது.

மட்டுநகரில் சிலகாலமாக விடுதலை உணர்ச்சி மங்கிக் கிடந்ததும், கவிஞரின் வருகைக்குப்பின் புதுமலர்ச்சி ஒன்று தோன்றியதும் தமிழ் மக்கள் அறிந்தவிடயம. கவிஞர் மீண்டும் சிறைபிடிக்கப்பட்ட பின்பும் தமிழுணர்ச்சியை மங்கிவிடாமற் பாதுகாத்து வந்தவர்கள் மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினரே. அரசியல் எதிரிகளின் கொட்டங்கள் அடக்கப்பட்டதற்கும் இளைஞர்களின் தீவிரப் போக்கே காரணமாய் அமைந்தது. ஓரிருமாதமாக பெப்ரவரிக்குப் பிறகு தூங்கிக்கிடந்த விடுதலையுணர்வை மீண்டும் தட்டியெழுப்பியபெருமை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர்க்கே உரியது.

## மூன்றரை ஆண்டு ..

—2-ம் பக்கத் தொடர்

...பிர இவர் வேறொரு குற்றமும் செய்யவில்லை. ஈழத்தமிழகத்திற்கு சுதந்திரம் கேட்பது குற்றமென்றால், இன்றைய 35 லட்சம் ஈழத் தமிழர்களில் 75 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் "தனி நாடு" கோரிக்கைக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகிறூர்களே! இவர்களையெல்லாம் அரசு சிறையில் அடைத்து வைக்கப்போகிறதா?

# "காட்டிக்கொடுக்க அன்று ஒரு முத்துசாமி இன்று அதே இடத்தில் ஒரு குமாரசூரியர்!

## தேசிய அரசுப்பேரவையில் துரைரத்தினம்!

தேசிய அரசுப் பேரவையில் கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் பற்றி பேசிய, பருத்தித்துறை பிரதிநிதி திரு. கே. துரைரத்தினம் பின்வருமாறு கூறினர்:—

திரு. துரைரத்தினம்:- கண்டி மன்னன் கண்ணுச்சாமியைக் கவிழ்க்க பிரிட்டிஷார் ஒரு முத்துசாமியைச் கூட்டிச் சென்றது போல் அரசாங்கம் வடபகுதியில் கூட்டுறவு இயக்கத்தை நாசமாக்க ஒரு முத்துசாமியை வைத்துள்ளது.

அமைச்சர் குலத்திலகா:- யார் அந்த முத்துசாமி?

திரு. துரைரத்தினம்:- உபசபாநாயகர் அனுமதித்தால் அவர் யார் என்று கூறுகிறேன்.

உபசபாநாயகர்:- அவர் யார் என்று கூறலாம்.

திரு, துரைரத்தினம்:- அவர்தான் ஐயா, கௌரவ தபால் தந்தி தொடர்பு அமைச்சர். (சிரிப்பு)

பிரதமர்:- அவர் மீது உங்களுக்குள்ள குரோதத்தினுல் இப்படிக் கூறுகிறீர்கள்.

திரு. துரைரத்தினம்:- இல்லை மேடம், நான் கண்டிய சரித்திரத்தை சற்று நினைவுபடுத்துகிறேன். கண்ணுச்சாமியைக் கவிழ்க்க துணை நின்ற முத்துசாமியின் கழுத்து துண்டிக்கப்பட்டு விட்டது.

கம்பளை எம். பி. ஜயரத்தின:— உப சபாநாயகர் அவர்களே, சபை முன்புள்ள பிரேரணை பற்றி பேசாமல் யாரோ ஒரு குப்புசாமியைப் பற்றி பேசுகிறூர்கள்.

அமைச்சர் இரத்னுயகா: அவர் இப்போதுதான் சரித்திரம் படிக்கிறூர்.

திரு. துரைரத்தினம்:-நான் முத்துசாமியைப்பற்றி முன்னர் பலமுறை கௌரவ பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சருக்குகூறியுள்ளேன் அப்போதெல்லாம் அவர் அதை விளையாட்டாக எடுத்துக்கொண்டார். இப்போது தான் அவர் உண்மையை உணர்ந்துள்ளார்.

உப சபாநாயகர்:— சரி. சரி முத்துசாமியை விட்டு விட்டு, விவாதத்திற்கு வாருங்கள். நீங்கள் நன்கு விளையாட்டு காட்டுகிறீர்கள். (சிரிப்பு)

## சைவ மகா சபை பொன் விழா

மத்தியமாகாணம் சைவ மகா சபையின் பொன்விழா கண்டி புஷ்பதான மாலிகா மகாவித்தியாலய மண்டபத்தில் 30-7-76, 31-7-76, 1-8-76 ஆகிய நாட்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. கருத்தரங்கு, கவியரங்கு, இசையரங்கு பட்டிமன்றம், நாடக அரங்கு, நாட்டிய அரங்கு எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இம்மகா சபையின் தலைவராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் பணியாற்றுகிறூர்.

## த. வி. கூட்டணி கருத்தரங்கு

பட்டிருப்பு த. வி. கூட்டணிக் கிளையினரால் பட்டிருப்புத்தொகுதியில் 31-7-76 சனிக்கிழமை மாலை கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன. இக்கருத்தரங்குகளில் திருவாளர்கள் ஈழவேந்தன், இரகுபதிபால ஸ்ரீதரன், பூ. கணேசலிங்கம் கா. அன்ரன், வ. ஆ. தங்கவேலாயுதம் ஆகியோரும் பட்டிருப்புத்தொகுதியின் த. வி. கூட்டணி, தமிழ் இளைஞர்பேரவை கிளைப் பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.

## மட்டுநகரில் கருத்தரங்கு

இளைஞர் விடுதலை வாரத்தை முன்னிட்டு 31-7-76 சனிக்கிழமை காலை 9மணிக்கு மாபெரும் கருத்தரங்கு ஒன்றை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை ஒழுங்குசெய்துள்ளது. இக்கருத்தரங்கு மட்டக்களப்பு ஈஸ்வரன் வீதியில் அமைந்துள்ள 'அம்பலவாணர் இல்லத்தில்' நடைபெறும். இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு கிளைத் தலைவர் ஈழவேந்தன், தமிழ் இளைஞர்பேரவை கொழும்புக்கிளைத் தலைவர் இரகுபதி பாலஸ்ரீதரன், முன்னள் மா.ச. உறுப்பினர் திரு. இரா. அம்பலவாணர் திரு. பூ. கணேசலிங்கம், திரு. வ. க. தங்கவேலாயுதம் ஆகியோர் கலந்துகொண்டுஉரையாற்றுவர். இக்கருத்தரங்கிற்கு மட்டக்களர்பு மாவட்ட தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் திரு. கா. அன்ரன் தலைமை வகிப்பார்.

## பதுளையில் ஈழவேந்தன்

'தமிழின் பெருமாள்தாள் பணிவோம்' என்ற தலைப்பில் பதுளை இந்துமன்றத்தில் 2-8-76 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஈழவேந்தன் சொற்பொழிவாற்றுகிறூர்.

## நிதி சேகரிப்பு

இளைஞர்கள் எழுச்சி வாரத்தை முனனிட்டு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர் 23-7-76ல் நிதி சேகரிக்கத் தொடங்கினர். இந்நிதி சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் குடும்பங்கட்காகவும், சட்ட உதவிகட்காகவும் திரட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. இளைஞர் பேரவையினரோடு மட்டக்களப்பு தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர் திரு. இரா. அம்பலவாணரும் நிதி சேகரிப்பில் கலந்துகொண்டார்.

"மில்க்வைற் செய்தி" இதழ்-8

10 மில்க் வைற் நீல சோப், அல்லது 2 பார் சோப், அல்லது 2 நீம் சோப், அல்லது 2மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி "மில்க்வைற் செய்தி இதழ்-8 ஐப்" பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத தொழிலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக்காவலில் பத்து நாட்கள்

## (5) குமாரசூரியரின் கோமாளிக் கூற்று

ஐந்தாம் நாள் 26-5-76 புதன்கிழமை காலை பிரதி பொலிசுப் பரிசோதகர் நாயகம் திரு. அனு செனவிரத்தின அங்கு வந்து எங்களைச் சந்தித்தார். நாங்கள் ஒருவரோடொருவர் உரையாடலாம் எனவும், தேவைப்பட்டால்பொலிசு உத்தியோகத்தர் முன்னிலையில் தொலைபேசியைப்பயன்படுத்தலாம் எனவும் அவர் எங்களுக்குக் கூறினார். எங்களுடைய குறைகளையும் அவர் அறிய முயன்றார். திரு. நவரத்தினத்தையும் திரு. துரைரத்தினத்தையும் மேல்மாடிக் கூடுகளுக்குச் செல்லலாம் எனவும் அவர் அறிவித்தார். திரு. துரைரத்தினம் திரு. அமிர்தலிங்கத்தின் கூட்டுக்குப் பக்கத்திலும் திரு. நவரத்தினம் எனது கூட்டுக்குப் பக்கத்திலுள்ள கூடுகளுக் குடிவந்தனர்.''

நான்கு நாள் பிரித்து வைக்கப்பட்டவர் கூடினால் பேசாமலா இருப்பார்கள்! அன்றைய பொழுது பலவகையான உரையாடல்களில் கழிந்தது. நண்பர்களையும் உறவினர்களையும் எங்களைச் சந்திப்தற்கும் அனுமதி வழங்கப்பட்டதாகையால் பலர் அன்று பிற்பகல் அங்கு வந்து எங்களைச் சந்தித்தனர். முதலிலே சந்தித்தவர்கள் திரு. மு. சிவசிதம்பரம் திரு. கோவை மகேசன் திரு. பேரின்பநாயகம் திரு. கரிகாலன் என்போரே. இவர்கள் வெளியுலகச்செய்திகளை எடுத்துக் கூறினார்கள். கர்த்தால் எதிர்பாராதவெற்றியை ஈட்டிற்று எனவும், பாடசாலைப் பகிஷ்கரிப்பும் பாராட்டத் தக்கமுறையில் நடைபெற்றதெனவும் அறிந்தோம்.

தம்புலைப் பேச்சிலே பிரதம அமைச்சர் வேண்டுமென்றே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைப்பற்றிக் கூறாமல் தமிழரசுக்கட்சியை மட்டுமே காட்டியதை வன்மையாக ஆட்சேபித்துத் தாம் பிரதம அமைச்சருக்குச் சுடச்சுட எழுதிய கடிதத்தினையும் திரு. சிவசிதம்பரம் எங்களுக்குக் காட்டினார்.

பிரதம அமைச்சர் தமிழ்க் காங்கிரசை ஒதுக்கிவைத்துப்பேசினமையில் தமிழ்க் காங்கிரசுத் தலைவர்கள் தலைமையில் அடுத்த சனிக்கிழமை 29-5-76இல் மீண்டும் யாழ்ப்பாணத்தில் துண்டுப்பிரசுரங்களை வழங்க வேண்டுமெனப் பலர் கருதுவதாகவும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவசரப்படவேண்டாம், யூலை மாதத்திலிருந்து போராட்டத்தைத்தொடர்ந்து நடத்தலாம்'' என்று நாங்கள் கருத்துந்தெரிவித்தோம்.

ஆறும் நாள் 27-5-76 வியாழக்கிழமை காலையில் நாங்கள் யோகாசனங்களிலீடுபட்டோம். நால்வருமே சில யோகாசனங்களில் பயிற்சியுடையவர்களாயிருந்தோம்.

திரு. அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றினை எழுதத்தொடங்கினார். திரு. நவரத்தினமும் திரு. துரைரத்தினமும் சட்டநூல்களைப் படித்தார்கள். திரு. நவரத்தினம் அளவெட்டிக் கொள்ளைவழக்கில் முதலாம் எதிரி சார்பாக வழக்குரைத்தவராகையால் அவர் அவ்வழக்கினை நன்கு நடத்துவதற்குத் தேவையானவற்றை ஆராய்ந்தார். அவருடைய உதவிச்சட்டத்தரணிகளும் அங்கு அவரைச் சந்தித்து வழக்கினை நடத்துதல் பற்றி உரை ஆடினார்கள். எங்களை 31-5-76இல் விடுதலை செய்வார்கள் என நாங்கள் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை. எனவே தாம் இல்லாமலே வழக்கைத்தொடர்ந்து நடத்துதற்குத் தமது உதவிச்சட்டத்தரணிகளை திரு. நவரத்தினம் வழிப்படுத்தவேண்டியிருந்தது.

எங்களை வந்து பார்த்த நண்பர்களும் உறவினர்களும் தடுப்புக்காவலில் எங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறதெனபதை அறியப பேராவல்கொண்டனர். நாங்களும் வேறிடங்களில் காணமுடியாதகாட்சிகளையும்பெற

பண்டிதர்
**கா. பொ. இரத்தினம்**

முடியாத அனுபவங்களையும் அங்கு கண்டு அனுபவித்தோம். எனவே எங்கள் தடுப்புக்காவல் வாழ்வைப் பற்றி எழுத நான் எண்ணினேன். எழுதத்தொடங்கினேன்.

திருவாளர்கள் சே. மா. செல்லத்தம்பு பா. உ. திரு. செ, இராசதுரை பா. உ. திரு. பா. நேமநாதன் பா. உ. திரு. க. தங்கத்துரை பா. உ. எனும் நாலவரும் அன்று முறபகல் எங்களைப் பார்க்க வநதனர். கிழக்கு மாகாணத்திலும் நாஙகள துண்டிதழ்களைவழங்கினோம்; எனினும் அரசு எங்களில் ஒருவரையேனும் கைது செய்யவில்லை. எனவே நாங்கள் யாவரும் அடுத்த சனிக்கிழமை (29-5-76) யாழ்ப்பாணத்தில் துண்டிதழ்களை வழங்க ஒழுங்குசெய்யவேண்டும் என்று கிழக்குமாகாணப் பா. உ.க்கள் கருத்துத்தெரிவித்தனர். இப்பொழுது அவசரப்படத்தேவையில்லை; யூலை மாதத்தில் போராட்டத்தைத்தொடர்ந்து நடத்தலாம்'' என்று நாங்கள் கூறினோம். அன்று பிற்பகலிலும் நணபர்கள் பலர் எங்களை வந்து பார்த்தனர். சோதிடர் சிலரும் தோல்விக்கு இடமில்லை என்று கூறி ஊக்கினர்.

மேல்மாடியிலே அடைபட்டுக்கிடப்பதால் நாங்கள் மாலை நேரங்களில் தடுப்புக்காவல் முகாம் வளவுக்குள் விரைவாக நடப்பதன்மூலம் உடற்பயிற்சி செய்தோம்.

ஏழாம் நாள் 28-5-76 வெள்ளிக்கிழமை காலை பத்திரிகைச் செய்திகள் பல எங்கள் கவனத்தை ஈர்த்தன. நாங்கள் கைதுசெய்யப்பட்டபின் சமயத் தலைவர்களும், அரசியற்கட்சித் தலைவர்களும் எங்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும், இத்தகைய நடவடிக்கைகளால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்றும் விடுத்த செய்திகள் பத்திரிகைகளில் ஏறக்குறைய நாள்தோறும் வெளிவந்தன. வண. கலாநிதி [illegible] மேதர், சீனக்கொம்மியூனிசக்கட்சிச் செயலாளர் திரு. நா. சண்முகதாசன், திரு. பிரின்சுகுணசேகரா பா. உ. கொம்மியூனிசக்கட்சி யாழ் பிரதேசக்கிளையினர், திரு. வாசுதேவ நாணயக்காரா பா. உ. சமசமாசக்கட்சியின் வடபிரதேசக் கிளையினர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்றைய வீரகேசரியில் வெளிவந்த 'தபால்தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் அறிக்கை எங்களுக்குப் பெரும் நகைச்சுவை விருந்தளிததது. 'கோமாளிக்கூற்று' யாரைத்தான் நகைக்கச் செய்யாது. 'தமிழர் பிரச்சினைகட்குத தீர்வு காண பிரதமர் நடவடிக்கை' —'மந்திரி குமாரசூரியர் கூறுகிறார்,' எனும் தலைப்புக்களில் சிங்கள ஏகாதிபததியத்தின் தலைமைத் தரகர்,—சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் துணைத்தலைவர் — வடமாகாணத்துக்குப் பொறுப்பான சுதந்திரக்கட்சி அமைபபாளர் சிங்கள ஏகாதிபத்தியத் தலைவியால் கருணைகூர்ந்து தமிழ் மக்களின் 'பிரதிநிதியாக' மந்திரி சபைக்கு நியமிக்கப்பட்ட ஒரேஒரு தமிழ் மந்திரி — ப. நோ. கூ, சங்கங்கள், கழக விளைபொருள் குழுக்கள் முதலியவற்றுக்கு இயக்குநர்களை நியமித்தல் போனற பெரும் பணிகளால் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆள்பிடிக்கும் "கங்காணி" ...... விடுதத அறிக்கைவெளியிடப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சர் குமாரசூரியர் முன்னரும் இதுபோன்ற பல அறிக்கைகளை வெளியிட்டுக்கோமாளிக்கூத்தாடியிருக்கின்றார்.

**''சூரியர் அண்ணாச்சி- உங்கள் தமிழ மொழித திட்டம் என்னாச்சு''**

என்று நான் பல ஆண்டுகளுக்கு முன்னரே பாராளுமனறத்தில் அவரைக்கேட்டேன். அமைச்சர் குமாரசூரியர் நடுஇராத்திரியில் அம்மையாரின் கருணையில் அமைச்சர் பதவி ஏற்ற நாள் தொடக்கம் இன்றுவரையும் செஞ்சோற்றுக்கடன் கழிககஅறிககைகள் விட்டுக் கொண்டுதானிருக்கிறார். இந்த அறிக்கைகள் யாவற்றையும் திரட்டி இணைத்துப் படித்துப்பார்ததால் இவருடைய கோமாளக் கூறறும் ஏமாற்றும் வித்தையும் நன்கு புலனாகும்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தினால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன என்று பத்திரிகைகளிலும் மேடைகளிலும் முழங்கிய பித்தர் கூட்டத்தின் தலைவரும் இவரே. இப்பொழுது தமிழா பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பிரதமர் 'ஆயத்தஞ் செய்து கொண்டிருக்கிறாராம்'. 'தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை புதிய அரசியல் சட்டத்தால் தமிழர்கள் அடிமைகளாக்கப் பட்டுள்ளனர்' என்பதுதானே எங்கள் போராட்டம். பிரதமர் தீர்த்துவிட்டார் என்று துதிபாடிய பித்தர்களை இன்று பிரதமர் தீர்த்துவைக்க ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கிறார் என்று கூறச் செய் [illegible] மையை—மொழியை மனச

# 40கிராமம் கூட்டணி கிளை அமைப்பு

கடந்த 24.7.76 பிற்பகல் 4.30 மணியளவில் திரு. கணேசலிங்கம் அவர்கள் தலைமையில் பட்டிருப்பு தொகுதியிலுள்ள 40 கிராமம் அம்மன் கோயில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது, அப்பொழுது தலைவர் உரை நிகழ்த்தும்போது இன் இன்றைய அரசியல் பறறியும் "ஏன் வேண்டும் ஈழம்" என்பது பற்றியும் ஓர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அதன்பின்னர் திரு. நா. முத்துப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் நாம் ஏன் பிரிந்து எமக்கென்று ஓர் அரசை அமைக்கவேண்டும்என்பதை அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கான மக்களுக்கு எடுத்துக்கூறினார். பின்னர் திரு. இரா. மதுரநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இளைஞரின் பங்கு என்பது பற்றிய விளக்கத்தை மிகவும் அழகு தமிழில் அற்புதமான முறையில் கொடுத்தார். அதனபின்னர் அமைப்புச் செயலாளர் கூட்டணிக்கிளைகள் கிராமம் தோறும் ஏன் அமைக்கவேண்டும் அவற்றின் சேவை என்னவென்பதையும், இத்தனை காலமும் எமது மக்கள் பார்வையாளர்களாக இருந்தார்கள். இனிப் பங்காளர்களாகப் பணிபுரிந்து எமது சுதந்திரத்தைப்பெறவேண்டும். என்று கூறியதுடன் சமுகம் தந்தவர்களுககு நன்றியுரை கூறினார். இனிது கூட்டம் முடிவெய்தியது. பின்னர் த. வி. கூ. கிளை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. க. பாலிப்போடி உபதலைவர் திரு. சி. சந்திரசேகரம் செயலாளர் திரு. கு. கனகசூரியம், உப செயலாளர் கு. கணபதிப்பிள்ளை பொருளாளர் திரு. வ. நாகராசா, நிர்வாக அங்கத்தவர்கள் ஒன்பது பேர் தெரிவுசெய்யபபட்டனர். முறையே திரு, சி, செல்வநாயகம், த. அழகானந்தம், க, பரமானந்தம், இராசநாயகம், க. இராசமாணிக்கம், சா. கணபதிப்பிள்ளை, சா. கணபதிப்பிள்ளை, மா, யோகராசா, கணேசபிள்ளை, ச. மைக்கல்.

# அந்நிய சிங்கள நாடு தயா....

—3-ம் பக்கத் தொடர்

ஒரு சட்டபூர்வமான குற்றமாகக் கணிக்கமுடியாது.

'உகண்டா, ரொடீஷியா. பாகிஸ்தான், சைப்பிரஸ் ஆகிய நாடுகளின் நீதிமன்றங்கள் தங்களின் நீதி வழங்கும் அதிகாரம்ப்ற்றி தங்களுக்கே தீர்மானிப்பதற்கு பூரண அதிகாரம் இருக்கிறது என்று தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. (அதற்கு ஆதாரமாக பல வழக்குகளின் தீர்ப்புகளை திரு, திருச்செல்வம் சுட்டிக்காட்டினார்.)

காஷ்மீர் மகாராஜாவின் அங்கிகாரத்துடன் தான் காஷ்மீர் இந்தியாவுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

### திணிப்பு

இரு நாடுகளின் சட்டமன்றங்களும் அல்லது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் விரும்பி சட்டமியற்றி ஒரு நாடகாச்சங்கமமாவதற்கு அதிகாரம் அளிப்பதன்மூலமும், ஒரு நாட்டை மற்ற நாடு ஆக்கிரமிப்பதன் மூலமும், ஒருநாடு தனது அரசுரிமையை மற்ற நாட்டிற்கு தாரைவார்த்துக் கொடுப்பதன் மூலமும், இரு நாடுகளும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின் மூலமும், இரு நாட்டு மக்களின் விருப்பத்தின் மூலமும் தான் இரு நாடுகள் ஒரு நாடாக மாற முடியும். ஆனால் யாழ்ப்பண ராஜ்யம் என்று பண்டைக் காலத்தில் அழைக்கப்பட்ட தமிழ் நாட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறாமலேயே வேற்றுநாட்டுக்காரர்களான சிங்கள ஆட்சியாளர்கள் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரித்து அதனை தமிழ்மக்கள் தொண்டைக்குள்சட்ட விரோதமாகத் திணித்துள்ளார்கள்,

### சோல்பரி கவலை

சோல்பரி அரசியல் அமைபுத் திட்டத்தின் பிதாவான சோல்பரி பிரபு ஒரு புத்தகத்துக்குஎழுதியமுன்னுரையில், சோல்பரி அரசயல் அமைப்பு திட்டத்தின் 29வது ஷரத்து சிறுபான்மையோரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதாக அமைந்திருந்த போதிலும், அதில் தாம் மக்களின் அடிப்படைஉரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் ஷரத்தையும் இணைப்பதற்கு தவறிவிட்டதாக கவலை தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசியல் நிர்ணய சபையில் ஒரேயொரு வாக்கினால் மட்டுமே இந்தி அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளளப்பட்டது. ஆனால் அதே வேளையில் சுமார் 16 மொழிகளை பிரதேச மொழிகளாகவும் சட்டபூர்வமாக அரசியல் நிர்ணய சபை அங்கீகரித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில திரு. திருச்செல்வம் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் ரோமன் டச்சு சட்டத்தின் பிரபல சட்ட நிபுணரான புட் என்பவர்,ரோமன் டச்சு சட்டத்தின் கடந்த 800 வருட அனுபவம் பற்றிய நூலின் அதிமுக்கிய அம்சங்களை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார் ஒரு நீதிமன்றத்துக்கு தன்னை நியமித்த அரசியல் அமை[illegible] புத் திட்டத்திற்கு [illegible]ராகத் தீர்ப்பு வழங்குவதற்கு மட்டுமல்லாது. அவ்வழக்கினால் பாதிக்கப்பட்ட எதிரிக்கு நீதிமன்றம் வழக்கின்செலவு தொகையை வழங்கமுடியும் என்ற புட்டின் வாதத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாட்சியை விற்று வயிறு வளர்க்கிறவர்கள் தவிர்ந்த மக்கள் யாரேனும் மறுப்பார்களா?

—வளரும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘இன விடுதலைப் போராட்டத்தில் அமிர்தலிங்கம் இறங்கியது ஏன்?’

## ‘தமிழனின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தொடங்கி இருபதாண்டுகளாகிவிட்டன!’

**“தமிழர்களின் உரிமைகளுக்காக இவ்வழக்கின் எதிரிகளான திரு. அ. அமிர்தலிங்கமும் ஏனையோரும் நடத்திவரும் அஹிம்சைப் போராட்டம் இன்று நேற்று ஆரம்பமானவையல்ல. தனிச்சிங்களம் அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுமுதல்—இன, மொழி கலாசார ரீதியாக 1956ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி ஒதுக்கப்பட்டதுமுதல்—இவர்களது உரிமைப் போராட்டம் ஆரம்பமாகி கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. தமிழினத்தின் இறைமையும் ஏனைய உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் எதிரி இன ரீதியான முறையில் விடுதலைப் போராட்டத்தை நடத்திவருகிறார்.”**

இவ்வாறு தமிழர் தலைவர்களுக்கெதிரான ட்ரயல்-அற்-பார் வழக்கு விசாரணையில் திரு. அமிர்தலிங்கத்தின் சார்பாக ஆஜராகி வாதாடியவர்களில் ஒருவரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. கூறினார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

அரசியல் ரீதியாக சிறுபான்மையினரான தமிழர்களுக்காக இவ்வழக்கின் எதிரிகள் நடத்தி வரும் அகிம்சைப்போராட்டம் இன்று நேற்று ஆரம்பமானவையல்ல. தனிச்சிங்களம் அரசகருமமொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது முதல் இன, மொழி, கலாச்சார ரீதியாக தமிழர்களின் அடிப்படை உரிமைகள் 1956ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி ஒதுக்கப்பட்டபோதே ஆரம்பமாகியது.

அரசியல் ரீதியாக சுதந்திரத்துடன் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதையும், தனியாக ஆட்சிசெய்தவர்கள் தமிழர்கள் என்பதையும் சரித்திரபூர்வ ஆதாரங்களை வைத்து இந்த நீதிமன்றத்தில் எனது நண்பர் திரு, திருச்செல்வம் கியூ. ஸி. எடுத்து விளக்கினார்.

இரு இனங்கள் சம உரிமையுடன் வாழ்ந்த நாட்டில் ஒரு இனத்தின் மொழியுரிமையை, இறைமையை பறிக்கும் வகையில் இன்னொரு இனம் அரசியல் ரீதியான நடவடிக்கைகளைக் கையாண்டதாலேயே மொழிக்காகவும், இனத்திற்காகவும் எதிரிகள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து நியாயம் கேட்டு நிற்கிறார்கள்.

### கோரிக்கை புதியதல்ல

எதிரிகளின் கோரிக்கை புதியது அல்ல. பெல்ஜியத்தில் இனத்தால் பிரிவுபட்ட மக்கள் சம அந்தஸ்துடனும், சகல உரிமைகளுடனும் வாழ்கிறார்கள். இத்தாலியிலும் இந்த ஐக்கியத்தை நாம் காணமுடிகிறது. அதைபோலவே பிரான்சிலும் பல இன மக்கள் தனித்தனி சம அந்தஸ்துடன் கௌரவமாக நடத்தப்படுவதையும் உதாரணமாகக் கூறலாம்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவினையுடன் தனியாட்சி கோரி போராட்டம் நடத்த முக்கியகாரணமாக அமைந்த செயல் பாரபட்சமான அரசியல், இன மத, மொழி போன்ற நடவடிக்கைகளே ஆகும். முஸ்லிம் மக்களின் இறைமையைப் பறிக்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், இனரீதியாக அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து முஸ்லிம் மக்களை ஒதுக்கியதும் சிறுபான்மையினராக வாழ்ந்த முஸ்லிம் மக்களைக் கொதிப்படையச் செய்தது. அகில இந்திய தேசிய காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு ஆதரவாக அல்லாமல் அவர்களுக்கு எதிராக நடக்க ஆரம்பித்தவுடன் அந்நாட்டில் அரசியல் ரீதியான போராட்டங்களை நடத்தினார்கள். இறுதியில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் இந்த மக்கள் நடந்துகொள்ளவில்லை என்று இங்கிலாந்திலிருந்து வந்த பிரிட்டிஷ் விசாரணைக்குழு கருதியதன் விளைவாக அரசியல் ரீதியாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கப்பட்டது. ஆனால் இந்துக்கள் முஸ்லிம்களின் உரிமைகள் வரையறுக்காததால் தொடர்ந்து நடந்த போராட்டத்தின் மூலம் பாகிஸ்தான் தனி நாடானது. அதன் பிறகும் இந்தியாவில் பல இன மக்கள் வாழ்வதால் எல்லோருக்கும் ஏற்ற விதத்தில் எல்லா இன மக்களுக்கும் அந்தஸ்து அளிக்கும் வகையில் அரசியல், பொருளாதார, கலாசார, இன, மொழி ரீதியிலான அரசியல் அமைப்புத்திட்டம் உருவாகியதுடன் அவைகளைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் அமைக்கப்பட்டது.

எதிரிகள் இவ்வழக்கில் அரசியல் அமைப்பு திட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை எடுத்ததாக இங்கு கொண்டுவந்து விசாரணைக்கு நிறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் அரசியல் அமைப்பு திட்டத்தை மீறி செயல்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்கள். ஆனால் தனிச் சிங்களம் அரச



கரும மொழியாக மாற்றப்பட்ட காலம் முதல், புதிய அரசியல் அமைப்புத்திட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது வரை இவர்கள் தங்களது போராட்டத்தை நடத்திவருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒதுக்கப்பட்ட நிலையில் நியாயமான முறையில் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்புத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றே.

‘பெரும்பான்மைமக்களின் ஆதரவோடு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது, ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டவர்கள் யார் இருக்கிறார்கள்? அல்லது புதிய அரசியலமைப்பு திட்டத்திற்கோ, அரசுக்கோ ஆதரவாக மக்கள் பிரதிநிதியாக எவரும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்களா?

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து அமைக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புத் திட்டம் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை வலியுறுத்திவந்தவர்களில் எதிரியும் ஒருவர். இந்த நிலையில் சகலவிதமான அரசியல் உரிமைகளும் இறைமையும் பறிக்கப்பட்ட நிலையில் எதிரி இனரீதியான முறையில் விடுதலைப் போராட்டத்தில் இறங்கினார்.

1956ம் ஆண்டு தமிழர்களின் சமஉரிமை அந்தஸ்துக்கு இடையூறு ஏற்பட்ட அன்றுதான் இத் துரதிஷ்ட நிலை ஏற்பட்டது. அரசியலில் உரிமை மறுக்கப்பட்டு, இன, மொழி ரீதியாக பாகுபடுத்தப்பட்ட ஒரே காரணமாகவே தமிழர்கள் 1956ம் ஆண்டிலிருந்து சுயநிர்ணய உரிமைப் போராட்டம் நடத்திவருகிறார்கள்!”

## கூட்டணிக் கிளைகள் அமைத்தல் அமைப்புச்செயலாளர் சுற்றறிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் அமைத்தல் சம்பந்தமாக கூட்டணியின் அமைப்புச் செயலாளர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் கூட்டணி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் கீழ்காணும் சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மகாநாட்டில் எடுத்த தீர்மானத்தின்படி ஈழத்தமிழகம் எங்கும் ஏனைய தமிழர்கள் கணிசமாகக் குடியிருக்கும் பகுதிகளிலும் தாமதமின்றி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் அமைக்கவேண்டும்.

இத்தொண்டில் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் ஏற்கனவே ஈடுபட்டிருக்கின்றனர்,

2. இக்கிளைகள் அமைக்கும்பொழுது வட கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு தமிழ் கிராமத்தையும் அடக்கக்கூடிய முறையில் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். சில இடங்களில் ஒரு கிராமத்திற்கு ஒரு கிளை அமைக்கவேண்டி நேரிடும். ஆனால் சனத்தொகை கூடிய கிராமங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகள் தேவைப்படும். அதேபோல் ஒரு பிரதேசத்தில் பல சிறு கிராமங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கும் இடத்தில் பல கிராமங்களைச்சேர்த்து ஒரு கிளை நிறுவ வேண்டி ஏற்படும். பட்டணங்களிலும், நகரங்களிலும் மக்களின் தேவைக்கும் இயக்கத்தின் முன்னேற்றத்திற்கும் பல கிளைகள் உருவாக்குவது அவசியமாகும். ஆனபடியால் தொகுதி உறுப்பினர்களும், உறுப்பினர்கள் இல்லாத இடங்களில் கூட்டணி அமைப்பாளர்களும் தங்கள் தங்கள் தொகுதிகளில் மக்களின் வசதிக்கும் கூட்டணியின் வளர்ச்சிக்கும் எத்தனை கிளைகள் தேவை என்று தீர்மானிக்கவேண்டும். ஒவ்வொரு கிளைக்கும் பெயரும் அதிகார எல்லையும் தீர்மானிக்கவேண்டும்; அத்துடன் ஒவ்வொரு கிளைக்கும் தொகுதி ரீதியாக தொடர் இலக்கமும் கொடுக்கவேண்டும். இவ்விதமாக கீழ் குறிப்பிட்டிருக்கும் விபரங்களை தயவுசெய்து நாலு வார கால எல்லைக்குள் எனக்கு அனுப்பிவைக்கவும்.

தொகுதியின் பெயர்:-

கிளையின் தொடர் இலக்கம்:-

கிளையின் பெயர்:-

கிளையின் அதிகார எல்லை:-

3. இவ்விபரங்கள் கூட்டணியின் அலுவலகத்திற்கு அத்தியாவசியம் தேவை. இவ்விபரங்கள் கிடைத்தவுடன்தான் வட கிழக்கு மாகாணத்தில் எத்தனை தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகள் அமைக்கப்படும் என்று எங்களுக்கு தெரியவரும். ஆனபடியால் இந்த விபரங்களைக் காலதாமதமின்றி அனுப்பிவைக்கவும்.

4. நான் முன்கூறியதுபோல் பல தொகுதிகளில் உறுப்பினர்களும், அமைப்பாளர்களும் சில கிளைகளை ஏற்கனவே நிறுவி இருக்கிறார்கள். அப்படி நிறுவப்பட்ட கூட்டணிக் கிளைகளினுடைய விபரம் பிரத்தியேகமான ஒரு அட்டவணையில் எனக்கு உடனடியாக அனுப்பிவைத்தால் மிகவும் நன்றி. இந்த அட்டவணையில் கிளையின் தொடர் இலக்கம், பெயர், அதிகார எல்லைகள் குறிப்பிடப்படவேண்டும். அத்துடன் ஒவ்வொரு கிளையின் நிர்வாகிகளின் பெயர்களையும் (தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள்) அனுப்பிவைக்கவும்.

5. தமிழகம் எங்கும் இக்கிளைகள் வெகுவிரைவில் இயங்கவேண்டிய காரணத்தால் இத்தொண்டில் கூடிய கருசனை எடுத்து உங்கள் தொகுதிக்கு தேவையான கிளைகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—சே. மா. செல்லத்தம்பு பா. உ.

தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்புச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# நூற்றுக்கணக்கான காவடிகள் ஆயிரக்கணக்கான மக்கள்!

## மட்டுநகரில் பக்திவெள்ளத்தோடு உணர்ச்சி வெள்ளமும் கரைபுரண்டோடியது!

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர், காராக்கிருகங்களில் அடைபட்டு வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காகவும், நல்வாழ்விற்காகவும் காவடி நேர்த்திக்கடனை 25-7-76 ஞாயிற்றுக்கிழமையன்று இரவு நடாத்தி முடித்தனர். இக்காவடி நேர்த்திக்கடனைச் செய்ய வேண்டுமென முதன் முதலில் திட்டம் தீட்டியவர் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களே ஆவர். சென்ற வருடம் மாமங்கேஸ்வரர் ஆலய உற்சவகாலத்தில் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் நல்வாழ்விற்காக காவடி நேர்த்திக்கடனைச் செய்ய வேண்டுமென இளைஞர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் சிங்கள அரசு அவரைச் சிறைப்பிடித்தது. காவடி எடுக்கவும் தடை விதித்து கவிஞர் காசி ஆனந்தனையும் அவரது சகோதரர்களையும் கைது செய்து இன்றுவரை சிறையில் அடைத்தும் வைத்துள்ளது. கிழக்கின் இளம் பரிதியைக் கைது செய்ததன் மூலம் இயக்கத்தையே இல்லாமற் செய்து விடலாமென அரசு மனப்பால் குடித்துக் கொண்டிருந்த வேளையில், சென்ற வருடம் இளைஞர்கள் துணிந்து நின்று காவடி நேர்த்திக்கடனை மிகவும் சிறப்பாக நடாத்தி முடித்தனர். இவ்வருடமும் காவடி நேர்த்திக்கடனை செய்ய வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் முன்வந்தனர்.

இம்முறை காவடி ஊர்வலம் இரு பிரிவுகளாக கல்லடி சித்திரவேலாயுத சுவாமி கோவிலிலிருந்தும், புளியந் தீவு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவிலிலிருந்தும் ஆரம்பிக்கப்பட்டு பொலிஸ் நிலையச் சந்தியில் ஒன்றிணைந்து மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை சென்றடைந்தது காவடி ஊர்வலம் சென்ற பாதைகளின் இருமருங்கிலும் வயோதிபர், தாய் தந்தையர், சிறுவர் சிறுமியர் என மக்கள் வெள்ளம் திரண்டு நின்று 'அரோகரா' கோஷம் போட்டு தங்கள் தங்கள் பங்கையும் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டக்களப்பில் ஆதரவுகிடையாது; இங்கிருப்பதெல்லாம் தனிப்பட்ட ஒரு சிலருக்கான ஆதரவே'' எனப்பொய்ப்பிரச்சாரங்கள் செய்தவர்கட்கெல்லாம் சாட்டையடிகொடுப்பதைப் போல—காவடி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் 'அரோகரா' கோஷத்தோடு எழுச்சிக் கோஷங்களையும் எழுப்பிச் சென்றனர்.

"கவிஞர் காசிஆனந்தன் வாழ்க, தந்தை செல்வா வாழ்க, தமிழர் விடுதலைக் கூட்டணி வாழ்க'' என்றெல்லாம் கோஷங்கள் எழுப்பப்பட்டதைப் பார்க்கும்போது மட்டக்களப்பு மக்கள் தந்தை செல்வாமீதும், கவிஞர் காசிஆனந்தன் மீதும் எந்த அளவுக்கு பற்றும் பாசமும் வைத்திருக்கின்றார்கள் என்பதும்; தமிழர் விடுதலைக் கூட்டணிமீது நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என்பதும் தெட்டத் தெளிவாக விளங்கியது.

குறிப்பாக இளந் தலைமுறையினர் கவிஞர் காசி ஆனந்தனை விடுதலைசெய், தமிழ் இளைஞர்களை விடுதலை செய், தமிழ்ஈழம் அமைப்போம், என்றெல்லாம் கோஷித்தபோது தமிழ் இளைஞர்களின் மகத்தான சக்தியைப் பற்றியும், அவர்கள் கவிஞர் மீது வைத்திருக்கின்ற அன்பையும் காண முடிந்தது. ஆட்சியாளர்கள் அடுத்தமாதம் 5ம் திகதிக்கிடையில் தமிழ் இளைஞர்களை விசாரணைக்குக்கொண்டு வராமலோ, விடுதலைசெய்யாமலோவிட்டால், திட்டமிட்ட 5ம்திகதி சிறைச்சாலைகளில் சாகும்வரையிலான உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு யாராவது ஒரு இளைஞர்க்காவது ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால், ஆயிரக்கணக்கில் சிறைச்சாலைகளை நிரப்ப தாங்களும் தயாராகிவிட்டார்கள் என்பதை அவர்கள் எழுப்பிய கோஷங்கள் வெளிப்படுத்தின.

—5-ம் பக்கம் பார்க்க


13-வது வெற்றி வாரம்!

**செல்லமகால்**

**றீகல்** (மட்டுநகர்)

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி. நடித்த

ஜனாதிபதி விருது பெற்ற

**'அவள் ஒரு தொடர் கதை'**

திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.S.c.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

**கெபிட்டி**

தேங்காய் சீனிவாசன், சுபா தங்கவேலு, ஜோதிலட்சுமி, சோ, மனோரமா, கோபாலகிருஷ்ணன்.

நடித்த

**உங்க வீட்டு கல்யாணம்**

**கிங்ஸ்லி** 3வ-து வாரம்

முத்துராமன், விஜயகுமாரி, ரவிச்சந்தர் நடித்த

**அமுதா**

**பிளாசா** 4-வது வாரம்

முத்துராமன்- கே.ஆர்.விஜயா, ரவிச்சந்தர் நடித்த

**ரோசக்காரி**

கெப்பிட்டல்

**அனாதை ஆனந்தன்** (கலர்)

எதிர்பாருங்கள்

ஜெய்சங்கர், பானுமதி, நிர்மலா நடித்த—

**எடுப்பார் கை பிள்ளை** (கலர்)

**வெலிங்டன்** 2-வது வாரம் (யாழ் நகர்)

சிவகுமார், ஜெயசித்ரா, கமலகாசன், —நடித்த

**தேன் சிந்துதே வானம்**

**லிடோ** (யாழ் நகர்)

உங்க வீட்டு கல்யாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமி[illegible] கொழும்பு 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.